**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.799/2021 பெயர்-தங்கவேல் நாள்.19.06.2024

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில்தான் நான் குடியிருக்கிறேனா என்றால் தற்சமயம் இல்லை, இதற்கு முன்பு குடியிருந்தேன். 2012 லிருந்து மேற்படி விலாசத்தில்தான் குடியிருந்து வந்தேன் என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனு எண்.5/2024 லும், மேற்படி விலாசத்தில்தான் நான் குடியிருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.871/2018 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.2/2023 லும், மேற்படி விலாசத்தில்தான் நான் குடியிருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இ.ம.எண்.2/2023 ன் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆனால் நான் மேற்படி விலாசத்தில் குடியிருக்கவில்லை. மேற்படி அ.வ.எண்.871/2018 வழக்கில் இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல்தான் தற்சமயம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கின் என்னால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 ம் பிரதிவாதி முத்துவேல் என்னுடைய நீண்டகால நண்பர் என்றால் சரியல்ல. உறவினரும் அல்ல. அவர் வீட்டை கிரயம் வாங்கினவர், மற்றபடி எந்த சொந்தமும் கிடையாது. தாவா இடத்தை 02.03.2011 ல் காலி இடமாக நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். 2016-2017 வருடத்தில் மேற்படி இடத்தில் வீடு கட்டினேனா என்றால் 2012 லேயே வீடு கட்டிவிட்டேன். ஒரு வருடத்தில் கட்டி முடித்துவிட்டேன். 2016-2017 வருடத்தில் மேற்படி இடத்தில் வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. மேற்படி வீடு கட்டும் சமயத்தில் எனக்கு பணப்பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால் நான் வாதியிடம் 04.08.2016 ம் தேதியில் ரூபாய் 4 லட்சம் கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. மேறப்டி கடனுக்காக 19.01.2018 ம் தேதியிட்ட காசோலையை வாதியிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி காசோலைக்கான தொகையை நான் திருப்பி கொடுக்காத காரணத்தினால்தான்

வாதி மேற்படி அ.வ.எண்.871/2018 வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. தாவா இடத்தில் வீடு கட்ட எனக்கு சுமார் 50 லட்சம் செலவாகிருக்கும் என்றால் 25 லட்சம்தான் செலவாகிருக்கும். அ.வ.எண்.871/2018 வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்டுள்ள அதே சங்கதிகளைதான் இந்த வழக்கின் எதிர்வழக்குரையிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி அ.வ.எண்.871/2018 வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிட்ட சங்கதிகள் ஏற்றுக்கொள்ளப்படாமல் மேற்படி வழக்கில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்புரை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்றும் நோக்கில் 14.11.2018 ம் தேதி வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலமாக என்னிடம் இருந்த ஒரே சொத்தை என்னுடைய நண்பரான 2 ம் பிரதிவாதியின் பெயரில் பெயரளவிலான மோசடியான ஒரு கிரய பத்திரத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் தாவா சொத்தில் நாளது தேதி வரை நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியின் பெயரிலான கிரய பத்திரம் சரியான பிரதிபிரையோஜனத்திற்கு ஏற்படுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் கண்டுள்ள கிரய தொகையை பார்க்கிலும் பல மடங்கு மதிப்புள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கிரய பத்திரத்தில் வாதியிடம் பெற்ற கடன் தொகை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கடனை நான் வாங்காததால்தான் அதில் குறிப்பிடப்படவில்லை. 2 ம் பிரதிவாதிக்கு நான் வாதியிடம் பெற்ற கடன் தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தவிர வேறு சொத்து இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் கண்டுள்ள கிரய தொகைக்கும், பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 வங்கி கணக்கு பட்டியலுக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்று சொன்னால் மேற்படி கிரய தொகையை கொண்டுதான் வங்கி கடனை அடைத்தேன். கிரய தொகையை பெற்று வங்கி கடனை அடைத்ததாக கிரய பத்திரத்தில் வாசகங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான், ஆனால் வங்கி கணக்கு பட்டியலில் தொகை செலுத்தியதற்கான விவரம் உண்டு. கிரய தொகை ரூ.30,00,000/- ஆகும். அதை நான் கையில் பெற்றுக்கொண்டேன். வா.சா.ஆ.6 கிரய பத்திரம் மோசடியானது, சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியுள்ள நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மற்ற நபர்களுக்கும் கடன் தொகை திரும்ப செலுத்தியதாக நான்

சொல்லியுள்ள நிலையில் அதுகுறித்ததான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சட்டப்படி அனுமதிக்கப்படதக்கது என்றாலும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.